# “தேனகத்து மலர்முகத்தைத் தேடுகிறோம் தலைவா!

# தென்பொதிகைத் தென்றலுனைப் பாடுகிறோம் தலைவா!”

டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.,
மேனாள் ஒன்றிய இணையமைச்சர்





பன்னூறாண்டுச்
சாதனைகளைத் தன்
தொண்ணூறாண்டு வாழ்க்கையில்
தொட்டு முடித்து
எவரும் எட்டமுடியாத உயரத்தை
எட்டிப் பிடித்து
வானுயர் தோற்றம் பெற்ற
வரலாற்று நாயகர்

ஏற்றிருந்த பதவிக்கு
ஏராள எழில்கூட்டி
இலக்கிய வீணையை
எப்போதும் தான்மீட்டி
சாற்றவொணா உழைப்புக்குச்
சரித்திரப் பொலிவூட்டி
அளவற்ற பேராற்றல்
அரசரெனும் முடிசூட்டி
அற்புதங்கள் பலபுரிந்த
அருமைத் தலைவர்

‘வீற்றிருந்த பொழுதெல்லாம்
வெளிச்சத்தைப் பெற்றேன்’ என்று
அவர் அமர்ந்த அரியாசனமே
அகங்களித்து நிற்க
அஞ்சுமுறை தமிழகத்தை
அலங்கரித்து நின்ற
அறிவாண்மைச் சீலர்

‘ஆயிரம் யானை பலம்
ஆர்த்துவரும் சேனை பலம்
அனைத்திலும் மிக்க பலம்
அரசியலில் தக்க பலம்
பகுத்தறிவுப் பாசறையின்
பக்க பலம்தான்’ என்று
பகைப்புலம் அதிரப்
படைநடத்திப்
பார்வியக்க வைத்த
பைந்தமிழ் வேந்தர்
மூவாப் புகழ்மேவும் நம்
முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்!

**அவர்
ஈட்டி வைத்த சொற்களும்
எழுதி வைத்த பாக்களும்
தீட்டி வைத்த உரைகளும்
திரட்டி வைத்த நூற்களும்
நாட்டி வைத்த கலைகளும்
நடிக்க வைத்த மொழிகளும்
பூட்டி வைக்க முடியாத
பொக்கிஷங்கள் அல்லவா!
நம்மை
ஆட்டி வைக்கவே பிறந்த
அறிவுக் கருவூலங்கள்
அல்லவா!**

அவர் எழுதிய பக்கங்கள்
எத்தனையோ லட்சங்கள்!
அதிலே கூட
அதிசயமில்லை!
அத்தனை பக்கங்களும்
அறிஞர்களால் புலவர்களால்
சாமான்ய மக்களால்
படிக்கப்பட்ட பக்கங்கள்!

படைக்கப்பட்ட பக்கங்கள்
எத்தனை என்பதா
இங்கே முக்கியம்?
படிக்கப்பட்டதா என்பதே
முக்கியம்!

கலைஞரின் வாய்மொழியைக்
கற்றவர்கள் எல்லாம்
காலத்தை வெல்லும்
கலைஞர்கள் ஆனார்கள்!

மனப்பாடம் செய்த
மாணவர்கள் எல்லாம்
நற்றமிழ் பேசும்
நாவலர்கள் ஆனார்கள்!

செவியால் பருகிச்
சிலிர்த்தவர் எல்லாம்
கவியாய் மாறிக்
கர்ஜனை செய்தார்கள்!

பொங்குமலர்க் கமலத்தின்
புதுமதுவோ வேறெதுவோ
எனமயங்க வைத்த
சொற்கூட்டங்கள்!

புத்தின்பச் சிந்தனைகள்
பூத்துக் குலுங்கிவரும்
பூங்காவனங்கள்!

மனமொழியும் இருவிழியும்
வழிந்தோடும் வண்ணம்
வந்து குதித்த
தத்துவத் தேன்குடங்கள் என்று
எத்தனை விதமான
இலக்கிய வடிவங்கள்!
எத்தனை படிமங்கள்!

அத்தனைக்குள்ளும்
அவர்பதித்த முத்திரை
நித்திலத் தமிழ்நிலத்தின்
நித்திரை கலைத்த
நிலையை என் சொல்வது?

மூழ்கி மூச்சடக்கி
முந்நீர்க் கடலுக்குள்
முத்தெடுப்பார்கள்
அது வழக்கம்!
முத்தமிழறிஞர் கலைஞர்
முத்தமிழ் ஆழிக்குள்
மூழ்கி எடுத்ததெல்லாம்
முத்துகள் அல்ல
முத்தாரங்கள் அல்லவா!
எதையும்
கொட்டிக் கொடுக்காமல்
கட்டிக் கொடுத்து
நம் கருத்திலும்
தமிழனின் கழுத்திலும்
ஆரக் காதலுடன்
அணிவித்துக் களித்தவர்
அருந்தலைவர் கலைஞர்!

**வாட்டத்தில் கிடந்த
வாலிபக் குருதிகளின்
ஓட்டத்தை மாற்றிய
உற்சாகத் தமிழை
ஒளிபெய்து ஒளிபெய்து
உற்பத்தி செய்த
மொழி விஞ்ஞானியின்
முழுப்பெயர் சொல்என்றால்
முத்தமிழறிஞர் முத்துவேல்
கருணாநிதி
என்றுதான் முழங்கும்
இலக்கியப் பேருலகம்!**

வரிக்கு வரி பொறிபறக்கும்
வார்த்தைத் தெறிப்புகளில்
நொடிக்கு நொடி வெடித்திட்ட
நூதன எரிமலைகள்
புத்தகத்தைத் தாண்டிப்
புத்திகளைத் தீண்டிய
வித்தகத்தை நினைத்தால்
வியப்புத்தான் விரிகிறது
இன்றும்!

திரையிலும் உரையிலும்
திரியத் தொடங்கிய
கலப்பு நடைக்குள்ளே
காணாமல் போனதமிழ்
உகப்பு நடையிட்டு
உலாவரத் தொடங்கியது
அவரால்தானே!

உச்சி மலையிருந்து
ஓடிவரும் பேரருவி
இடைப்பட்ட தடையெல்லாம்
இடையூறாய்க் கருதாமல்
உடைத்துக் கொண்டே
ஓடிவரும் அழகைப்போல்,
உணர்ச்சிகளின் உச்சத்தில்
உரைசெய்யும் பட்சத்தில்
சமூகக் கேடுகளைச்
சாடுகிற அழகும்
ஊற்றாக உளம்பொங்கிப்
பாடுகிற அழகும்
அவர்
காற்றாகிக் கனலாகி
கன்னித் தமிழ்பிழிந்த
சாற்றோடு சாறாகிக்
கூடுகிற அழகும்
காதுகளில் ஊஞ்சல்கட்டி
ஆடுகிற அழகும்
மேடைகள் அடைந்த
மேன்மைகள் அல்லவா!

அடைபட்ட வெள்ளம்
அணைதிறந்தால் பாய்வதுபோல்
திருவாய் அவர்திறக்கத்
தீந்தமிழ் நமக்கெல்லாம்
வருவாய் எனக்கிடைத்த
வரலாற்றை யார்மறப்பார்?

**சேரமான் வீரத்தின்
செழிப்பெடுத்துக் கொண்டானோ!
சோங்களனும் இவன்தானோ!
பாசமாய்த் தமிழ்வளர்க்கப்
பாண்டியனே வந்தானோ
என்று
திகைப்புக் குறிகளை
திசையெங்கும் வீசித்
திணறவைத்த சரிதம்தான்
தீக்கதிர்களின் பேரொளியாய்த்
திகழ்ந்த
திராவிடக் கலைஞரின்
திவ்ய சரிதம்!**

ஊனாலும் உயிராலும்
உருவான செந்தமிழைத்
தேனாலும் பூசித்
தித்திக்க வைத்த
தேவ தூதனா?
இல்லை,
திருவாரூர்த் தலத்தைத்
தேடிவந்து பிறந்த
கம்ப நாடனா?

சந்தச் சலங்கை கட்டி
சங்கத் தமிழைச்
சதுராட விடுதற்குத்
திருக்குவளை பூத்த
திரிகூட ராசப்பக் கவிராயனா?
என்று
ஐயக் கிளைவிகள்
ஆயிரமாய் வந்து
மொய்க்கின்ற அளவுக்கு
முத்தமிழைக் கையாண்ட
மூதறிஞர் அவர்!

இது மொழியா, இல்லை
மோகன ராகமா?
இது வசனமா, இல்லை
வைரத்தின் வார்ப்படமா?
இது சொல்லா இல்லை
சுருட்டி வைத்த வாளா?
இவர் தலைவரா,
இல்லை
தமிழே இவர்தானா?
என்று
மதிநுட்பம் மிக்காரும்
மந்திரத் தமிழாளும்
அதிநுட்பம் மிக்காரும்
அன்று மயங்கிய
அதே மயக்கம்
இன்றும் தொடர்வதுதான்..
இணைவைக்க முடியாத
அதிசயம் என்று
அரசியலே மலைக்கிறது!
அறிவுலகம் திளைக்கிறது!

வானாலும் மண்ணாலும்
வணங்கப் படுகின்ற
வையத் தலைவராக
அவர் என்றும்
வாழ்ந்து கொண்டே இருப்பார்
என்பதுதான்
அவரின்
வாழ்வியல் கற்பிக்கும்
வனப்புமிகு உண்மை!

சிறுமையைக் கண்டால்
சினக்கின்ற தலைவராய்
சிந்தனையால் மட்டுமே
கனக்கின்ற தலைவராய்

உயரிய தலைவர்கள்
உசுக்கின்ற தலைவராய்
உலா வந்த
ஒப்பிலாக் கலைஞர்
நிலவுலகத்தில்
நிலையாய் என்றும்
நிலவுவார் என்பது
நிலவும் கதிரும்போல்
நிச்சயமான உண்மை!

வான்கலந்த பூமி
வாழ்கின்ற வரைக்கும்
அவரின்
தேன்கலந்த தித்திப்பு
தீராது!

மதியழகும் கதிரழகும்
மலர்ந்திருக்கும் வரைக்கும்
அவரின்
மதிவண்ணத் தனியழகு
மாறாது!

எண்ணச் சோலையில்
என்றென்றும் பறக்கின்ற
வண்ணத்துப் பூச்சிகளாய்
வந்துகொண்டே இருக்கும்
எண்ணற்ற நினைவுகளால்..
நமக்குள்
இயங்கிக் கொண்டே
இருப்பார் அவர்!

மாநிலங்கள் அனைத்துக்கும்
மதிவழங்கும் கொற்றவராய்
மங்கையர்கள் போற்றுமுயர்
மாண்புகளைப் பெற்றவராய்
இன்றிருக்கும் நமது
இரண்டாவது கலைஞர்
நின்றிருக்கும் திசைநோக்கி
நெடும்படையாய் நாம்நிற்போம்!

கருத்தியல் புரட்சியின்
கனமான விளைவுகளைக்
கண்முன்னே கண்டு
களிகொண்ட பெரியாரும்

காகிதங்களை ஆயுதமாக்கி
காயங்களைக் கவசமாக்கி
களங்களை மேடையாக்கி
வெற்றிக் கனிகொய்து
வீற்றிருந்த அண்ணாவும்

‘உதய சூரியன் ஒருபோதும்
உதிராது’ என்று
உலகக் கண்களுக்கும்
உள்ளூர்க் காதுகளுக்கும்
உரக்கச் சேதி சொன்ன
உயிரனைய தலைவர் கலைஞரும்

**பின்னிப் பிணைந்து
பிழையறக் கலந்து
நீரில் புகுந்த
நீராய் இணைந்து
வேறெனத் தோன்றாமல்
திராவிட
வேரெனத் தோன்றி
விளங்கிப் பொலியும்
வித்தகர் ...
திராவிட மாடல் திலகம்..
தீந்தமிழ்ச் சுடர்விடும்
தென்னாட்டு ஞாயிறு..நம்
தளபதியின் திருவடியில்
தடம்பதித்து நிற்போம்!**

மூதுலகத்தின்
முதல்மொழியாகவும்
திராவிட மொழிகளின்
மூல மொழியாகவும்
ஞானம் அளந்த
ஞால மொழியாகவும்
கணிக்கவே முடியாத
கால மொழியாகவும்

என்றென்றும் வாழ்கின்ற
எம்மொழியாம் செந்தமிழைச்
செம்மொழியாம் என்று
சிறப்பித்த கலைஞரின்
செம்மாந்த திருப்புகழைச்
செம்மொழிநாள் பேசட்டும்!
சீர்மிகுந்த தளபதியைச்
செம்மொழியே வாழ்த்தட்டும்!

**தொட்டதை எல்லாம்
துலங்கச் செய்தார்
தூயதமிழ்க் கலைஞர்!
கருத்தில்
பட்டதை எல்லாம்
பட்டை தீட்டிக் கொண்டிருக்கிறார்
நம்
திராவிட மாடல் நாயகர்
தளபதி!**

**கரும்புகள் கொண்ட
கணுக்களைப் போலத்
ததும்புகள் கொண்ட
தலைவர்கள்..
இருவரும்!**

**எட்டிய வரைக்கும்
எட்டியெட்டிப் பார்த்தாலும்
இந்திய அரசியலில்
இவர்களுக்கு இணையில்லை
ஒருவரும்!**